# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, நவம்பர் - 2019

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, November - 2019**

FWC

| தரம் :- 12 (2021) | கணக்கீடு | நேரம் : 3 மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :.....................................

- *01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

agaram.lk

## பகுதி I

*01.* நிதிக்கணக்கீடு தொடர்பில் பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது/ எவை? (….)

A - இது வணிகத்தில அக்கறையுடையோருக்கு தீர்மானமெடுத்தலுக்கு தேவையான தகவல்களை வழங்குகின்றது

B - இது முகாமைக்கணக்கீட்டின் ஒரு பிரிவாகும்.

C - இது நிதியாண்டை அடிப்படையாக கொண்டு நிதியாண்டுக்கு ஒரு தடைவை தயாரிக்கப்படும்.

D - இது சட்டக் கட்டுப்பாடுகளை கொண்டது.

E - இது வரலாற்றுத் தகவல்களையும், எதிர்வுகூறப்படும் தகவல்களையும் அடிப்படையாக்கொண்டது

*1)* 1) A B C  2) C D E  3) A C D  4) A B C E  5) A C D E  (……....)

*02.* வணிகத்தில் அக்கறையுடைய தரப்பாக பின்வருவோர் காணப்படுகின்றனர்

A – அரசு  B – முகாமையாளர்  C – ஊழியர்  D – உரிமையாளர்

இவர்கள் பின்வரும் நோக்கங்களுக்காக அக்கறைபடுகின்றனர்.

1) தொழில் பாதுகாப்பும் உறுதிப்பாடும்
2) முதலுக்கான பாதுகாப்பு
3) வரிவருமானத்தை பெற்றுக்கொள்ளல், நுகர்வோரை பாதுகாத்தல்
4) வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி வணிக இலக்கை அடைதல்

மேற்குறிப்பிபிடட் நோக்கங்களை அடையும் தரப்பினரை வரிசைப்படுத்துக

1) B C A D  2) C D A B  3) D C A B  4) C B A D  5) D A C B  (……....)

03. கணக்கீட்டின் தொழிசார் சூழல் காரணியை உள்ளடக்கிய தொகுதி எது?

1) கணக்கீட்டு மென்பொருள், இலத்திரணியல் முறைமை, தகல் தொழில்நுட்பம்
2) சனத்தொகை வளர்ச்சி, பணவீக்கம், வடடிவீதம்
3) வட்டிவீதம், பணவீக்கம், வரிவிதிப்பு
4) வட்டிவீதம், பணவீக்கம், வேலைவாய்ப்பு
5) கணக்கீட்டு அமைப்புக்கள், கணக்கீட்டு நியமம், கணக்கீட்டு எண்ணக்கருக்கள் (……....)

04. நிதிநிலைமைக் கூற்றுக்களின் மூலமாக கருதப்படுவது எது?

1) வருமானம், செலவு, சொத்து, பொறுப்பு, உரிமை
2) சொத்து, பொறுப்பு, உரிமை
3) வருமானம், செலவு,
4) நிதிநிலைமைக்கூற்று, காசுப்பாச்சல்கூற்று, வருமானக்கூற்று
5) சொத்து செலவு வருமானம் (……....)

05. ரூ 20000 கிரயமான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டு இவை முழுவதும் ரூ 30000 விலையில் கடனுக்கு விற்கப்பட்டு கடன்பட்டோரிடம் 2/3 பகுதி 10% கழிவு தள்ளி பெறப்பட்டது இதனை பிரதிபலிக்கும் இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|---|
| 1) | +5000 | +5000 | - |
| 2) | +15000 | +8000 | +7000 |
| 3) | +25000 | +5000 | +20000 |
| 4) | +28000 | +8000 | +20000 |
| 5) | +18000 | +18000 | - |

(……....)

06. நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் கணக்கீட்டு செய்முறைகள் வருமாறு

A – முதற்பதிவேட்டில் பதிதல்
B – பரீட்சை மீதி தயாரித்தல்
C – மூல ஆவணங்கள் தயாரித்தல்
D – பேரேட்டை சமநிலைப்படுத்தல
E – கொடுக்கல் வாங்கல்

சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக.

1) C D B E A 2) C B E A D 3) E A D B C
4) E C B D A 5) E C A D B (……....)

07. சேரன் நிறுவனம் சோழன் நிறுவனத்திற்கு ரூ 20000 இற்கு கடனுக்கு விற்கப்பட்ட பண்டங்கள் ரூ 5000 பண்டங்கள் பழுதுகாரனதாக சோழன் சேரனுக்கு திருப்பப்பட்டதுடன் தரவேண்டிய மிகுதிக்கு சேரனால் காசோலை பெறப்பட்டது. இதனை சோழன் நிறுவனத்தில் பிரதிபலிக்கும் மூல ஆவணங்களின் தொடர் எது.

1) பற்றுச்சீட்டு வரவுத்தாள் காசோலை அடியிதழ்
2) பற்றுச்சீட்டு செலவுத்தாள் காசோலை அடியிதழ்
3) பட்டியல் செலவுத்தாள் பற்றுச்சீட்டு
4) விற்பனைபட்டியல் வரவுத்தாள் பற்றுச்சீட்டு
5) பட்டியல் வரவுத்தாள் கைச்சாத்து (……....)

agaram.lk

08. வரையறுத்த திலக் கம்பனியின் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக்கணக்கு ரூ 52000 பட்டியல் உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.

- கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கம் ரூ 1000 மிகையாக கூட்டப்பட்டது.
- எதிர்மாற்றல் ரூ 4000 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 400 என பதியப்பட்டது.
- கொள்வனவுத் திரும்பல் 5000 கொள்வனவுத் திரும்பல் நாளேட்டில் ரூ 500 என பதியப்பட்டது.

திருத்தப்பட்ட கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

1) ரூ 48500 2) ரூ 44500 3) ரூ 45500 4) ரூ 46500 5) 5100 (……....)

09. கம்சன் நிறுவனத்தின்சொத்து, பொறுப்பு தொடர்பான மீதிகள் வருமாறு.

| | **31.3.2019** | **31.3.2018** |
|---|---|---|
| சொத்துக்கள் | 240000 | 200000 |
| பொறுப்புக்கள் | 130000 | 100000 |

31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பற்றுக்கள் மேலதிக மூலதனம் முறையே ரூ 12000, ரூ 10000 ஆகும். 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் யாது?

1) ரூ (12000) 2) ரூ 12000 3) ரூ 8000 4) ரூ 10000 5) ரூ (10000) (……....)

❖ **சாரங்கன் நிறுவனத்தின் 2019 மே மாத விற்பனை விபரம் வருமாறு**

| **விற்பனை** | **விற்பனை** | **காசுக் கழிவு** | **வியாபாக் கழிவு** | **விற்பனை திகதி** | **பணம் செலுத்திய திகதி** |
|---|---|---|---|---|---|
| காசு | 10000 | - | 20% | 5.5 | 5.5 |
| தேசிகன் | 40000 | 10% | 20% | 10.5 | 18.5 |

பத்து நாட்களுள் பணம் செலுத்தும் வாடிக்கையாளருக்கே காசுக் கழிவு அனுமதிக்கப்படும் மேலேயுள்ள தரவுகளை அடிப்படையாகொண்டு 10ம் 11ம் வினாக்களுக்கு விடை தருக.

agaram.lk

10. மே மாதத்திற்கான கொடுத்த கழிவும் பெற்றகாசுத் தொகையும் முறையே யாது?

1) ரூ 3200 ரூ 44000 2) ரூ 3200, ரூ 8000 3) ரூ 3200 ரூ 28800
4) ரூ 3200 ரூ 36800 5) ரூ 2000 ரூ 36800 (……....)

11. மே மாதத்திற்கான விற்பனை வருமானமும், வியாபாரக் கழிவும் முறையே யாது?

1) ரூ 8000, ரூ 2000 2) ரூ 50000 , ரூ 12000 3) ரூ 46000 ரூ 10000
4) ரூ 50000 ரூ 10000 5) ரூ 40000 ரூ 10000 (……....)

12. மூல ஆவணத்திற்கு பொருத்தமான முதற்பதிவேட்டை இணைக்கும் சரியான தொடரை எடுத்துக்காட்டுக.

| **மூல ஆவணம்** | **முதற்பதிவேடு** |
|---|---|
| 1) வரவுத்தாள் | A காசுக்கொடுப்பனவு நாளேடு |
| 2) நாட்குறிப்பு கைச்சாத்து | B உட்திரும்பல் நாளேடு |
| 3) கைச்சாத்து | C கொள்வனவு நாளேடு |
| 4) செலவுத்தாள் | D பொது நாட்குறிப்பேடு |
| 5) பட்டியல் | E வெளித் திரும்பல் நாளேடு |

1) A C D E B 4) B C D E A 3) E D C B A
4) E D B C A 5) E D A B C (……....)

13. கணக்காண்டு முடிவில் கீழேதரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சோடிகளில் எது மூடியவையாகவும், மீதிமுன்கொண்டு செல்பவையாகவும் காணப்படுகின்றது.

| மூடியவை | மீதி முன்கொண்டு செல்பவை |
|---|---|
| 1) சொத்து | செலவு |
| 2) செலவு | சொத்து |
| 3) பொறுப்பு | வருமானம் |
| 4) வருமானம் | செலவு |
| 5) உரிமை | செலவு |

14. 2019 மார்ச் மாத வங்கிக்கூற்று ரூ 41000 செலவு மீதியை காட்டியது மார்ச் மாத மாற்றப்படாத காசோலை ரூ 12000 வசூழிக்கப்படாத காசோலை ரூ 6000 காசேட்டில்பதியாத நேரடிவைப்பு ரூ 2000, வங்கிக்கட்டம் ரூ 1000 எனின் காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

1) ரூ 36000 2) ரூ 35000 3) ரூ 28000 4) ரூ 38000 5) ரூ 34000 (……....)

15. வரையறுத்த சிரான் கம்பனியின் 2019 மே மாத காசுக்கட்டுப்பாட்டுமீதி 8000 செலவு மீதியை காட்டியது மே மாத வங்கிக்கூற்று வங்கி மீதி ரூ 6000 சாதகமான மீதியை காட்டியது. மே மாத வசூழிக்கப்படாத காசோலை ரூ 7000

மே மாத காசுக்கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படாத விடயங்கள்

நேரடிவைப்பு ரூ 5000 வங்கிக்கட்டனம் ரூ 2000 நிலையியற்கட்டளை வாடகை ரூ 3000 வைப்புச் செய்து மறுக்கப்பட்ட காசோலை ரூ 4000 மே மாதத்திற்கா மாற்றப்படாத காசோலை யாது?

1) ரூ 26000 2) ரூ 6000 3) ரூ 25000 4) ரூ 8000 5) ரூ 4000 (……....)

agaram.lk

❖ ***16 - 25* வரையான வினாக்களுக்கு விடை தருக**

16. பின்வரும் அடிப்படையில் நிதிக் கணக்கீட்டையும், முகாமைக் கணக்கீட்டையும் வேறுபடுத்துக.

| அடிப்படை | நிதிக் கணக்கீடு | முகாமைக் கணக்கீடு |
|---|---|---|
| 1) சட்டத்தேவை | ……………………….. | ……………………….. |
| 2) அறிக்கையிடும் காலம் | ………………………… | ………………………… |
| 3) அறிக்கை பயன்படுத்துவோர் | ……………………… | ………………………….. |

17. 15% பெறுமதிசேர் வரி (Vat) உட்பட ரூ 138000 கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் 15% பெறுமதிசேர் வரி (Vat) உட்பட ரூ 184000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது. காசாக செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி (VAT) ரூ 4000 ஆகும்.

பின்வருவனவற்றை கணிக்குக.

அ) வெளியீட்டுப் பெறுமதி மீதானவரி ……………………………………………..

ஆ) உள்ளீட்டுப் பெறுமதி மீதான வரி ……………………………………………..

இ) பெறுமதிசேர் வரிக்கணக்கு இறுதி மீதி ……………………………………………..

18. பின்வருவனவற்றுக்கான இரட்டைப்பதிவுகளை தருக?

அ) கட்டுநிதி மீள்நிரப்பல்

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ஆ) கடன்பட்டோரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலை மறுக்கப்பட்டது

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

19. ரூ 400000 பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களுக்கு 10% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் 2/3 பகுதி 5% கழிவுடன் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?

கொள்வனவு கணக்கு ……………………………………………………

பெற்றகழிவு ……………………………………………………

கடன்கொடுநர் கணக்கின் இறுதிமீதி ………………………………………

❖ தீசன் நிறுவனத்தின் 2019 மே மாதத்திற்கான நிறுவன தகவல்கள்

| | | |
|---|---|---|
| 1.5.2019 காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி | | 36000 |
| காசுப்பெறுவன நாளேட்டின் மொத்தம் | ரூ | 154000 |
| காசுக்கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் | ரூ | 130000 |

2019 மே மாதத்திற்கு காசுக்கட்டுப்பாட்டு தயாரிக்கப்பட்ட பின்னர் கிடைக்கப்பெற்ற வங்கிக்கூற்றில் பின்வரும் தகவல்கள் காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| வசூழிக்கப்பட்ட காசோலைகள் | ரூ | 124000 (நேரடிவைப்பு தவிர) |
| பணமாக்கப்பட்ட காசோலைகள் | ரூ | 118000 |
| வங்கிக்கட்டனம் | ரூ | 2000 |
| நேரடிவைப்பு | ரூ | 4000 |
| நிலையியற்கட்டளை வாடகை கொடுப்பனவு | ரூ | 3000 |

சென்றமாத மாற்றப்படாத வசூழ்கப்படாத காசோலை எவையுமில்லை.

❖ **மேற்படி தரவுகளில் இருந்து 20 ம், 21 ம் வினாக்களுக்கு விடை தருக.**

20. திருத்திய காசுக்கட்டுப்பட்டு கணக்கு மீதி யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

21. மே மாத வங்கிக்கூற்று மீதி யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

agaram.lk

22. நடைமுறையல்லாச்சொத்து ரூ 25000 குறைய நடைமுறைச்சொத்து ரூ 12000 அதிகரிக்க நடமுறைப்பொறுப்பு ரூ 28000 அதிகரிக்க நடைமுறையல்லாப்பொறுப்பு ரூ 15000 குறைவடைய ஆண்டுக்கான பற்று மேலதிக மூலதனம் முறையே ரூ 2000, ரூ 10000 எனின் ஆண்டுக்கான தேறியலாபம் யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

- வரையறுத்த காந்தி கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்பட்டோன் பேரேட்டுப் பட்டியல் மீதிகளின் கூட்டுத்தொகை மீதி ரூ 51500

  A – எதிர்மாற்றல் ரூ 6000 ஏடுகளில் எப்பதிவுக்கும் உட்படுத்தப்படவில்லை.

  B – விதித்த வட்டி ரூ 3200 கடன் பட்டோர் பேரேட்டில் ரூ 2300 என பதியப்பட்டது.

  C– விற்பனைத் திரும்பல் ரூ 5000 விற்பனைத்திரும்பல் நாளேட்டில் ரூ 500 என பதியப்பட்டது

  D – மறுக்கப்பட்ட காசோலை ரூ 4000 கடன்பட்டோன் பேரேட்டில் மாத்திரம் பதியப்பட்டது.

❖ **23ம், 24ம் வினாக்களுக்கு விடை தருக.**

23. திருத்தப்பட்ட கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

agaram.lk

24. திருத்தமுன் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

25. பின்வருவன நிதிக்கூற்றின் எத்தகைய மூலங்கள் என குறிப்பிடுக.

அ) சென்மதி வாடகை ……………………………………………,……

ஆ) பற்று ……………………………………………,……

இ) பெற்றதரகு ……………………………………………,……

ஈ) வியாபார வருமதிகள் ……………………………………………,……

(25x4100 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக.**

**வினா இல 01**

இளம்பரிதி நிறுவனத்தின் 2019 யூலை மாதத்திற்கான தகவல்கள் வருமாறு

1.7 மீதிகள்

| | | |
|---|---|---|
| காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு | | ரூ 84000 |
| மோட்டார் வாகனம் | | ரூ 200000 |
| இருப்பு | | ரூ 46000 |
| கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | | ரூ 30000 |
| பாவலன் | ரூ 18000 | |
| காவலன் | ரூ 12000 | |
| கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | | ரூ 19000 |
| பரதன் | ரூ 11000 | |
| தசரதன் | ரூ 8000 | |
| வங்கிக்கடன் | | ரூ 40000 |

3.7 காசோலை விற்பனை 20000

5.7 காசோலை மூலம் கொள்வனவு 15000

7.7 காசோலை மூலம் சம்பளம் ரூ 4000

9.7 பெற்ற வாடகை ரூ 8000

10.7 காசோலை மூலம் பற்று 3000

14.7 பாவலனுக்கு விற்பனை பட்டியல் விலை 20000 (10% வியாபாரக்கழிவு )

16.7 பாவலனிடம் 2/3 பகுதி 10% கழிவுதள்ளி பெறப்பட்டது

18.7 பரதனிடம் கொள்வனவு பட்டியல் விலை 10000 (10% வியாபாரக் கழிவு)

20.7 பரதனுக்கு ½ பகுதி 10% கழிவுதள்ளி காசோலை வழங்கப்பட்டது.

24.7 வரையறுத்த சோதியா கம்பனியிடம் ரூ 40000 மோட்டார் வாங்கப்பட்டது.

25.7 காவலனுக்கு விற்பனை ரூ 18000

26.7 தசரதனிடம் கொள்வனவு ரூ 12000

27.7 வங்கிக்கடன் பெற்றது 10000

28.7 சோதியா கம்பனிக்கு ரூ 20000 காசோலை வழங்கப்பட்டது

30.7 காசோலை மூலம் மின்சாரம் ரூ 3000

**வேண்டப்படுவது**

1. யூலை மாதத்திற்கான வேண்டிய முதற்பதிவேடுகள்
2. பொதுப்பேரேட்டில் வேண்டிய பேரேட்டுக்கணக்குகள்
3. 31.7.2017 இல் பரீட்சை மீதி

(30 புள்ளிகள்)

agaram.lk

**வினா இல 02**

வள்ளுவன் நிறுவனத்தில் 2019 மே மாதத்திற்கான இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

1.5 மீதிகள்

**மோட்டார் 120000 இருப்பு 40000, வியாபார வருமதி 60000, காசு 80000, மூலதனம் 150000 12% வங்கிக்கடன் ரூ 60000, வியாபார சென்மதி 35000, நிறுத்தி வைத்தலாபம் 55000**

மே மாதத்திற்கான தகவல்கள்

3.5 20000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

5.5 ரூ 20000 கிரயமான பண்டங்கள் ரூ 40000 கடனுக்கு விற்கப்பட்டது.

8.5 கடன்பட்டோனால் திருப்பியது ரூ 4000 (5.3 இல் விற்கப்பட்டது)

12.5 மே மாதத்திற்கு கிடைக்கப்பட்ட மின்சாரப்பட்டியல் ரூ 3000

15.5 மோட்டார் ரூ 60000 வங்கிக்கடன் மூலம் பெறப்பட்டது.

18.5 கடன்கொடுநருக்கு திருப்பியது ரூ 5000

22.5 உடமையாளர் பற்றிய காசு ரூ 2000

24.5 இல் மீதியாகவுள்ள கடன்கொடுநரில் ½ பகுதியினருக்கு 10% கழிவு தள்ளி செலுத்தப்பட்டது.

30.5 எதிர் மாற்றல் ரூ 6000

31.5 கடன்பட்டோரிடமிருந்து ½ பகுதி 10% கழிவு தள்ளி பெறப்பட்டது

**மேலதிக தகவல்கள்**

1) மோட்டாருக்கு 10% தேய்விடுக.
2) மே மாத வங்கிக்கடன் வட்டி சென்மதியாகவுள்ளது.
3) கடன்பட்டோரால் நேரடியாக வங்கியில் வைப்பிலிட்டது ரூ 20000 மே மாத வங்கிக்கட்டனம் ரூ 1000
4) 31.5 இல் இறுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாட்டை மேற்கொள்க.
5) 31.5 இல் உள்ள இருப்பில் ரூ 5000 பழுதடைந்த பண்டங்கள் அடங்கியுள்ளது இதனை ரூ 4000 மதிப்பில் இருப்பில் எடுக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

1) மேலதிக தகவல்கள் கருத்தில்கொள்ள முன்னர் முதல் 10 கொடுக்கல் வாங்களையும் (3.5 – 31.5 வரை) கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செய்து காட்டுக

   ஆதணம் பொறி + இருப்பு + வியாபார வருமதி + காசு = மூலதனம் + வங்கிக்கடன் + வியாபர சென்மதி + ஏனைய சென்மதி + நிறுத்தி வைத்தலாபம்
2) மே மாதத்திற்கான வருமானக்கூற்று
3) 31.5 இல் பின்வரும் மீதிகள்

   வியாபார வருமதி, இருப்பு, வியாபார சென்மதி, ஏனைய சென்மதி, தேறிய சொத்து

(30 புள்ளிகள்)

agaram.lk

**வினா இல 03**

வரையறுக்கப்பட்ட பானு கம்பனியின் 31/3/2019 இல் முடிவடைந்த நிதியாண்டக்கான தகவல்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1/4/2018 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு | ரூ | 34000 |
| 1/4/2018 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு | ரூ | 3000 |
| கடன்கொள்வனவு | ரூ | 124000 |
| செலுத்திய காசும் காசோலையும் | ரூ | 64000 |
| வெளித்திரும்பல் | ரூ | 4000 |
| பெற்றகழிவு | ரூ | 2000 |
| விதித்தவட்டி | ரூ | 4000 |
| எதிர்மாற்றல் | ரூ | 2000 |
| கிடைத்தபடி | ரூ | 1000 |

31/3/2019 இல் உள்ளவாறான கடன்கொடுநர் பேரேட்டுப்பட்டியலின் கூட்டுத்தொகை இம் மீதியுடன் உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.

1) கடன்கொடுநர்பேரேட்டிலுள்ள வரவுமீதி 1000ம் செலவுமீதி 3000 பெறப்பட்ட பட்டியவினுள் உள்ளடக்கப்படவில்லை.
2) கடன்கொடுநரால் விதித்த வட்டி 3500 துணைப்பேரேட்டில் சரியாக பதிவிடப்பட்டபோதிலும் கட்டுப்பாட்டுக் கணக்கில் 5300 எனவும் பதிவிடப்பட்டது .
3) மறுக்கப்பட்ட காசேலை ரூ 4000 புத்தகங்களில் எப்பதிவுக்கும் உட்படுத்தவில்லை.
4) கடன்கொடுநர் ஒருவரிடம் கிடைத்த கழிவு 1200 காசுக்கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரலில் 2100 என பதிவிடப்பட்டது.
5) கடன்கொடுநர் ஒருவருக்கு திருப்பிய 1500 பண்டங்கள் கடனகொடுநார பேரேட்டில் 500 எனவும் எனினும் கட்டுப்பாட்டுக்கணக்கில் சரியாக பதிவிடப்பட்டது.
6) கடன்கொடுநர் பேரேட்டுப்பட்டியல் 1000 ஆல் கூட்டிக்கூட்டப்பட்டது.

agaram.lk

**வேண்டப்படுவது:**

அ) திருத்தப்பட்டமுன் கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு

ஆ திருத்தப்பட்ட கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு

இ) திருத்தப்பட்ட கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கை பேரேட்டுப்பட்டியலுடன் கணக்கிணக்கம் செய்யும் கூற்று.

(20 புள்ளிகள்)

**வினா இல 04**

குபேரன் நிறுவனத்தின் 2019 மே மாதத்திற்கான வங்கிக்கூற்று கிடைக்க முன்னர் காசுக்கட்டுப்பாட்டு கணக்கு தகவல்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| 1.5 காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி | ரூ | 65000 |
| காசுவிற்பனை | ரூ | 135000 |
| ஏனைய வருமானம் | ரூ | 15000 |
| கடன்பட்டோரிடம் சேகரிப்பு | ரூ | 40000 |
| ஏனைய பெறுவனவு | ரூ | 15000 |
| காசோலைக் கொள்வனவு | ரூ | 108000 |
| கடன்கொடுநருக்கு செலுத்தியது | ரூ | 22000 |
| ஏனையசெலவு | ரூ | 8000 |
| ஏனையகொடுப்பனவு | ரூ | 12000 |

**மே மாதத்திற்கான வங்கிக்கூற்றில் உள்ள தகவல்கள் வருமாறு**

| | | |
|---|---|---|
| மே மாதத்தில் வசூழிக்கப்பட்ட காசோலைகள் | ரூ | 204000 |
| மே மாதததத்தில் பணமாக்கப்பட்டவை | ரூ | 135000 |
| நேரடியாக வசூழித்த பங்குலாபம் | ரூ | 8000 |
| நிலையியற்கட்டளை காப்புறுதி | ரூ | 4000 |
| காசோலைப் புத்தகக்கட்டணம் | ரூ | 2000 |

**மேலதிக தகவல்**

1) வங்கிக்கூற்றின் வரவு நிரல் ரூ 2000 மிகையாக கூட்டப்பட்டது.
2) மே மாதம் வசூழிக்கப்பட்ட காசோலைகளில் ஏப்பிரல் மாத காசோலை ரூ 4000 உள்ளடங்கியுள்ளது.
3) மே மாதம் மாற்றப்பட்ட காசோலைகளில் ஏப்பிரல் மாத காசோலை ரூ 3000 உள்ளடங்கியுள்ளது.
4) இவை தவிர ஏப்பிரல் மாதத்திற்கு மாற்றப்படாத, வசூழிக்கப்படாத காசோலை எவையும் காணப்படவில்லை.

**வேண்டப்படுவது**

1. மே மாத திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
2. மே மாத வங்கிக் கணக்கிணங்ககூற்று

(20 புள்ளிகள்)

**வினா இல 05**

அ) அழகன் சில்லறை வியபார நிறுவனத்தின் 2019 மே மாத்திற்கான சில்லறை கொடுக்கல் வாங்கல் வருமாறு ஒவ்வொரு காலத்தின் தொடக்கத்திலும் கட்டுநிதியாக ரூ 3000 பேனுவது வழக்கம்.

1.5 சில்லறை காசு மிதி 1240
1.5 கட்டுநிதி மீள்நிரப்பப்பட்டது
3.5 தேநீர்ச் செலவு ரூ 160
5.5 அஞ்சல் செலவு ரூ 240
7.5 பிரயானம் ரூ 150
10.5 முத்திரை ரூ 50
13.5 சில்லறை கடன்கொடுநருக்கு செலுத்தியது ரூ 400
15.5 வாடகை கார்கட்டனம் ரூ 200
18.5 சிற்றுண்டி ரூ 100
22.5 பயனச்சீட்டு ரூ 120
24.5 சம்பளமுற்பணம் ரூ 550
26.5 குளிர்பானம் ரூ 120
29.5 எரிபொருள் செலவு 110
31.5 சில்லறை காசாளன் ரூ 700 மாத்திரம் வைத்துள்ளார் எஞ்சியதை தொலைத்துவிட்டார்
1.6 கட்டுநிதி மீள் நிரப்பப்பட்டது. (ரூ 500 ஆல் கூட்டி மீள் நிரப்பப்பட்டது)

**வேண்டப்படுது**

அ) சில்லறைச் செலவுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடு
ஆ) சில்லறைக் காசுக்கணக்கும், சில்லறை செலவுக்கான வேண்டிய பேரேட்டுக் கணக்குகளும்

(12 புள்ளிகள்)

agaram.lk

ஆ) A, B, C, D, நிறுவனத்தின் ஏடுகளில் 31/3/2019 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1/4/2019 இல் சொத்து | 480000 | ? | 410000 | 300000 |
| 1/4/2019 இல் பொறுப்பு | ? | 135000 | 180000 | 110000 |
| 1/4/2018 இல் சொத்து | 350000 | 355000 | ? | 400000 |
| 1/4/2018 இல் பொறுப்பு | 150000 | 115000 | 120000 | ? |
| மேலதிக மூலதனம் | 20000 | 16000 | 15000 | 18000 |
| பற்று | 5000 | 3000 | 4000 | 2000 |
| இலாபம்/ நட்டம் | 10000 | (13000) | 12000 | (12000) |

தயாரிக்குக:- வெற்றிடங்களை நிரப்பக?

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk